Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள் 04 விலை ரூபா: 4-00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம் 01 மார்கழி (20 - 12 - 1990) வியாழக்கிழமை ஓசை 295

## வைத்தியசாலை வளவு நீர் அசுத்தமடைந்துள்ளது

யாழ். போதனா வைத்தியசாலையில் குடிநீர் அருந்த வேண்டாம் என வைத்தியசாலை ஊழியர்கள் பொதுமக்களுக்கு அறிவுறுத்தி வருகிறார்கள். மேற்படி வைத்தியசாலை வளவினுள் உள்ள கிணறுகள் மலசல கூடங்களுக்கு அருகில் தோண்டப்பட்டுள்ளதால் இவற்றுக்கிடையே கசிவுத்தொடர்பு ஏற்பட்டு நீர் மாசடைந்துள்ளது. இதன் காரணமாகத் தமக்கு வேண்டிய குடிநீரையும் நோயாளரே கொண்டுசெல்ல வேண்டிய நிலையேற்பட்டுள்ளது. (மு)

# கட்டுவன் குரும்பசிட்டி பகுதியில் நேற்று அதிகாலை கடும் மோதல்

## 8 பெண் போராளிகள் வீரமரணம்

(தெல்லிப்பழை)

கட்டுவன், குரும்பசிட்டி மினி முகாம்களில் இருந்து வெளியேற முயன்ற இராணுவத்தினருக்கும் அதைத் தடுக்க முயன்ற விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேற்று அதிகாலை இரண்டு மணித்தியாலங்களுக்கு மேல் கடும் மோதல் ஏற்பட்டது. இந்த மோதலைத் தொடர்ந்து இராணுவம் இழப்புக்களுடன் முகாம் திரும்பியது. விடுதலைப் புலிகள் தரப்பில் எட்டு பெண் போராளிகள் வீரமரணமடைந்தனர்.

இந்த மோதல் சம்பவம் பற்றித் தெரியவருவதாவது: நேற்று அதிகாலை 5-30 மணியளவில் கட்டுவன், குரும்பசிட்டி மினி முகாம் பகுதிகளில் இருந்து முன்னேற முயன்ற இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடும் மோதல் நிகழ்ந்தது. இந்த மோதலை விடுதலைப்புலிகள் தரப்பில் பெண்போராளிகளே முன்னின்று நடத்தினர்.

காலை ஏழுமணிவரை நீடித்த இந்த மோதலில் இராணுவத்தினர் பலத்த எதிர்த்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பெண் போராளிகள் 8 பேர் நேற்று வீரமரணம்

நேற்றைய மோதலில் புலிகள் தரப்பில் கப்டன் சுந்தரி (உருத்திராபதி உதயலட்சுமி நெடியகாடு, வல்வெட்டித்துறை) தவஜீவனா (கணபதிப்பிள்ளை சாந்தினி, மல்லாகம்) ஆனதி (ஐயாத்துரை கிருஸ்ணலீலா தண்ணீரூற்று முல்லைத்தீவு), சேரனா (ஜெகநாதன் ஜெகதீஸ்வரி குச்சவெளி திருக்கோணமலை) ஜெலோபா, சுகந்தா, கேதி, கா. நிரஞ்சனா ஆகியோர் வீர

(4 ஆம் பக்கம் பார்க்க)

## சகோதரர் வழியினில் தங்கை சுந்தரியும்

(நமது நிருபர்)

கப்டன் சுந்தரி, தமிழீழ விடுதலைப் புலிகள் இராணுவ தொழில் நுட்பப் பிரிவின் பொறுப்பாளராக இருந்த கப்டன் வாசு, மேஜர் ஜேம்ஸ் ஆகியோரின் சகோதரியாவர். கப்டன் வாசு 1987ல் கைதடியில் இடம் பெற்ற வெடி விபத்தில் வீர மரணமடைந்தவர். அவரது மற்ற சகோதரரான மேஜர் ஜேம்ஸ் அண்மையில் அச்சுவேலியில் வீர மரணமடைந்தார்.

## பாகிஸ்தான் - சிறிலங்கா உறவில் மேலும் நெருக்கம்

(இஸ்லாமாபாத்)

இலங்கை-பாகிஸ்தான் உறவுகள் நெருக்கமடைந்து வருகின்றன. இலங்கையுடன் இரு தரப்பு ஒப்பந்தங்களைச் செய்து கொள்வதற்கும், உறவுகளைப் பலப்படுத்திக் கொள்வதற்கும் பாகிஸ்தான் முன்வந்துள்ளது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கப்பல்களை வரவழைக்க அரச அதிபர் முயற்சி

(யாழ்ப்பாணம்)

காலநிலை சீரின்மை காரணமாக பருத்தித்துறை துறைமுகத்தைவிட்டு சென்றுவிட்ட கப்பல்களை மீண்டும் வரவழைக்க யாழ் அரச அதிபர் முயற்சி எடுத்துள்ளார்.

யாழ். மாவட்டத்தின் உணவுநிலைமை தொடர்ந்து குறைந்துகொண்டு செல்வதால் கப்பல்கள் மீண்டும் வந்து உணவுப் பொருள்களை இறக்க வேண்டும் என்று

(4 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் பலியான பிரிகேடியர் மேஜர் ஜெனரலாக பதவி உயர்வு

(கொழும்பு)

திருக்கோணமலையில் நேற்றுமுன்தினம் கண்ணிவெடித் தாக்குதலில் கொல்லப்பட்ட பிரிகேடியர் லக்ஷ்மன் விஜயரட்னா மேஜர் ஜெனரலாக பதவி உயர்த்தப்பட்டுள்ளார். இவர் திருக்கோணமலை மாவட்ட இராணுவப் பொறுப்பதிகாரியாகவும், இராணுவத் தளபதியாகவும் கடமையாற்றியவராவார். போராளிகளுக்கு எதிரான நடவடிக்கைகளைத் திட்டமிட்டுச் செயலாற்றுவதில்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தாந்தாமலையில் 5 தமிழர் இராணுவத்தால் சுட்டுக்கொலை

(மட்டக்களப்பு)

சிறிலங்கா இராணுவத்தினர் படுவான்கரைப் பகுதியிலுள்ள தாந்தாமலை அந்தோனியார் குளம் என்னும் இடத்தில் காலை 9.45 மணிக்கு கால்நடைகளை மேய்த்துக்கொண்டிருந்த ஐந்து தமிழ் இளைஞர்களைச் சுட்டுக் கொன்றுள்ளனர்.

பண்டையா மாசிலாமணி (17, கச்சிக்கொடி) கிருஸ்ண பிள்ளை நவரட்னம் (20, கச்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வீரவணக்கம்

### வோல்டர்

(யாழ்ப்பாணம்)

பட்டிருப்புப் பாலத்தில் நேற்று முன்தினம் இரவு ஏழு மணிக்கு விபத்துச் சம்பவம் ஒன்றில் 2வது லெப்வோல்டர் (கந்தசாமி சிவப்பிரகாசம் குருக்கள் மடம், மட்டக்களப்பு) என்பவர் வீரமரணம் அடைந்தார்.

### வசந்த்

சடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு7-30மணிக்குபுல்லுமலை என்னுமிடத்தில் இன்னுமோர் விபத்துச்சம்பவத்தில் வசந்த் என்ற போராளி வீரமரணமடைந்துள்ளார்.

இவ்விரு போராளிகளுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

## கூட்டுப்படை தலைமையகத்தில் வவுனியாவிற்கு வடக்கே வரும் வாகனம் அனுமதிபெற வேண்டும்

(வவுனியா)

வவுனியாவிற்கு வடக்கே பொருட்கள் ஏற்றிவரும் வாகனங்கள் யாவும் கொழும்பில் உள்ள கூட்டுப் படை தலைமையகத்தின் அனுமதி பெற்றே செல்ல வேண்டும் என்று சிறிலங்கா அரசு புதிய அறிவித்தல் ஒன்றை விடுத்துள்ளது.

வவுனியா நகரப் பகுதி தவிர்த்த வடமாகாணத்தின் எப்பகுதிகளுக்கும் பொருட்கள்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## 3 தமிழர் ஊர்காவற்படையால் ஆலையடிவேம்பில் கொலை

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் சிறிலங்கா ஊர்காவற்படையினரால் மூன்று தமிழர்கள் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்

கடந்த திங்களன்று காலை ஐந்துமணியளவில் அம்பாறை மாவட்டத்திலுள்ள அக்கரைப்பற்று ஆலையடிவேம்பு என்னுமிடத்தில் வைத்து சிறிலங்கா ஊர்காவற்படையினரால் மூன்று தமிழர்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர். (மு)

## ஐந்து படகுகள் மூழ்கடிப்பு

(கொழும்பு)

முல்லைத்தீவுக் கடலில் வைத்து சிறிலங்கா விமானப் படையினர் ஐந்து படகுகளை மூழ்கடித்ததாக ஏஜென்சிச் செய்திகள் கூறின. மூழ்கடிக்கப்பட்ட படகுகளில் யார் இருந்தார்கள் பற்றியோ, சேதவிபரங்கள் பற்றியோ எதுவும் தெரியவில்லை.

## வடமாகாண கல்விப் பணிப்பாளருக்கு ஆசிரியர் நேர்முகப் பரீட்சையை உடன் நிறுத்த கொழும்பு பணிப்பு

(யாழ்ப்பாணம்)

நேற்று ஆரம்பித்த தொண்டர் ஆசிரியரை நிரந்தரமாக நியமிக்கும் நேர்முகப் பரீட்சையை உடன் நிறுத்தும்படி கொழும்பிலிருந்து அவசரக் கட்டளை யாழ் கல்விப்பணிப்பாளருக்கு இடப்பட்டுள்ளது.

ஏற்கனவே திட்டமிட்டபடி யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கான தொண்டர் ஆசிரியர்களை நிரந்தர ஆசிரியர்களாக நியமிப்பதற்கு நேர்முகப்பரீட்சைகள் நடைபெற்றது. இந்தப் பரீட்சைகள் இடம்பெற்றுக் கொண்டிருந்த வேளையிலேயே உடனடியாக

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ரிச்சாட் டி சொய்சா கொலை பாராளுமன்றத்தில் விசாரிக்க சபாநாயகர் அனுமதி

(கொழும்பு)

கடந்த பெப்ரவரி மாதம் கொலைசெய்யப்பட்ட பத்திரிகையாளர் ரிச்சர்ட்டிசொய்சாவின் கொலை குறித்து பாராளுமன்றத்தில் விசாரணை மேற் கொள்ள சபாநாயகர் எம். எச். மொகமட் அனுமதி அளித்திருக்கிறார்.

ஆளும் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி இதற்கு மறுப்புத் தெரிவித்திருந்தபோதும் எதிர்க்கட்சித் தலைவி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா வேண்டியதன் பேரில் அனுமதி அளிக்கப்பட்டதாக மொகமட் தெரிவித்தார்.

**வரிவிளம்பரம்**

**விற்பனைக்கு**

நத்தார் புதுவருட வாழ்த்து மடல்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம் (வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு) "மண்டேலா ரேடர்" இல. 256A பருத்தித்துறை வீதி, நல்லூர். "அரஸ்ஜவுளியகம்" 146 நவீன சந்தை, யாழ்ப்பாணம். (B/788)

**விற்பனைக்கு**

நத்தார், புதுவருட காட்வகைகள் அனைத்தும் விற்பனையாகிக்கொண்டு இருக்கின்றன. வியாபாரிகளுக்கு விசேட கழிவு வழங்கப்படும். உங்கள் தெரிவுக்குமுந்துங்கள். அனைத்தும் புதிய டிசைன்கள் பூபாலசிங்கம் புத்தகசாலை மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம்; நல்லூர், யாழ்ப்பாணம்.

(-1718)


**The Jaffna Education Centre**
யாழ்ப்பாணக் கல்வி நிலையம்

(சாந்தி சினிமா முன்பாக மேல் மாடியில்) O/L, A/L. Spoken English, Shorthand Typing இரு மொழிகளிலும் நடைபெறுகின்றன. பெண்களுக்கு விடுதி வசதியுமுண்டு. (B. 1657)

**லைடன் ரெக்ஸ்ரைல்ஸ் சென்ரர்**

மேற்படி ஸ்தாபனம் மீண்டும் முன்னைய பினான்ஸ் கம்பனி கட்டடத்தில் (249, மின்சார நிலைய வீதி) தமது விற்பனையை 5-11-90 முதல் ஆரம்பித்துள்ளதுடன் புதுவருட பண்டிகையை முன்னிட்டு மலிவு விற்பனையும் நடைபெறுகின்றது என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம். (B. 1658)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



21-11-90இல்
அமரரான
உயர்திரு

## வேலுப்பிள்ளை நடேசபிள்ளை

(உணவுக் கட்டுப்பாட்டதிகாரி யாழ்ப்பாணம்.)

புங்குடுதீவு -
நயினாதீவு
வேலணை
ப. நோ. கூ. சங்க
பணிப்பாளர்களும்,
பணியாளர்களும்

உதவி அரசாங்க
அதிபரும்,
ஊழியர்களும்.

(R/947)

---

தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்,
யாழ். மாவட்டம்

## பொதுச் சபைக் கூட்டம்

இடம்:- நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயம்
காலம்:- 21 - 12 - 1990, வெள்ளிக்கிழமை
நேரம்:- பிற்பகல் 3 - 30 மணி

எமது சகல அங்கத்தவர்களும் தவறாது சமுகம் தரவும்.

(R-943) செயலர்.

---

## அரசாங்க கேள்வி அறிவித்தல்

**சுகாதாரத் திணைக்களம் - யாழ்ப்பாணம் பெரும்பாகம்**

20 - 12 - 90 ஆம் திகதி மு. ப. 10.00 மணிக்கு மூடப்படவிருந்த உணவு வழங்கல் சம்பந்தமான கேள்வி அறிவித்தல் 10-01-91 மு. ப. 10 00மணிக்கு மூடுவதற்கு பின்போடப்பட்டுள்ளது. 1990ஆம் ஆண்டுக்கான பெறுமதியைப் பற்றிய சான்றுரைப்படிவம் சமர்ப்பிப்பவர்களுக்கு மட்டுமே கேள்விப்படிவங்கள் வழங்கப்படும்.

சு.சே பி பணிமனை,
யாழ்ப்பாணம்,
18 - 12 - 1990.

டாக்டர் ந. கனகசபை
சுகாதார சேவைகள்
பிராந்திய பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

(B-1744)

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



வீரஜனனம் 25 07-1971
வீரமரணம் 20-11-1990

**வீரவேங்கை விக்னா**
(தனபாலசிங்கம் மகேந்திரகுமார்)

கைகளிலே ஏ. கே. அது துள்ளியாடும்
சமுத்திரிலே கொடிய விஷக்குப்பியாடும்
பையினிலே கிரனைட்டு சிந்துபாடும்
பால்மனமோ பைந்தமிழின் மீட்சிநாடும்
வைகறையோ நள்ளிரவோ பனியோ மழையோ
வையகத்தில் பாராமல் களங்கள் ஆடி
மைகவிந்த தமிழ்வாழ்வு மலர்ந்தே யோங்க
மரணித்த விக்னா உன்பாதம் பணிந்தோம்

அல்லாரை தெற்கு.
மீசாலை.

— குடும்பத்தினர்
R/934)

---

## 31 ஆம் நாள்நினைவஞ்சலி



தாயின் மடியில் 11 - 08 - 1974
தாயக மண்ணில் 20 - 11 - 1990

## "இளம்புலி நேசன்"

**செல்வன் குலசேகரம் முரளிதரன்**

(20-11-90 அன்று மாவிட்டபுரம் தச்சன்காட்டுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்துடனான மோதலில் வீரமரணமடைந்தார்)

சீறி வந்த சிங்கள இராணுவத்தை
சிதறி ஓட வைத்திடவே
சினம் கொண்ட வேங்கையாக
களத்திடை புகுந்தவனே - நீ
சிந்திய குருதியால் இம்மண் சிவக்கும்
இங்கொரு காலை விடியும்!

நீர்வேலி

—பெற்றோர், நண்பர்கள்

(R/942)

---

## 5 ஆவது ஆண்டு நினைவுநாள்



மண்ணிலே வந்த நாள் 05-07-1964
மண்ணுக்காகச் சென்ற நாள் 20-12-1985

**வீரவேங்கை கார்த்திக்**
(இ. உதயகுமார்) கோண்டாவில்.

அழிக்க வந்த பகைவர்தனை
ஒழித்து நின்றாய்
அரியாலை மண்ணிலே
மரித்துச் சென்றாய்
தமிழீழமதை நினைத்து நின்றாய் - உன்
வளமான வாழ்வை மறந்து சென்றாய்
மண்ணதனை மீட்பதற்கு
எண்ணமதில் உறுதி கொண்டாய்
களத்தினிலே எதிரி முன்னே
காற்றெனவே பறந்து சென்றாய்
சீறியது உன் துப்பாக்கி
சிதறியது பகைவர் கூட்டம்
மறக்கவில்லை எம் மனங்கள்
ஐந்தாண்டின் முன்னே - நீ
ஆற்றிய சேவை தன்னை
போற்றிடுவோம் தமிழீழமதில்.


—பெற்றோர், சகோதரர், உற்றார்,
உறவினர், நண்பர்கள்.

கோண்டாவில். (B-1732)

---

## 45ஆம் நாள் நினைவஞ்சலியும்

**அந்தியேட்டி அழைப்பும்**



வீர ஜனனம் 10 - 01 - 1966
வீர மரணம் 06 - 11 - 1990

வீரவேங்கை

## லெப்ரினன்ட் சுஜி

**(பொன்னுத்துரை நாகஜீவா)**
(பரப்புக்கடந்தான்)

தாய் தந்தை கலிதீர்க்க வந்தாயடா — நீ
தமிழீழம் காக்க வேங்கையானாயடா!
பன்னீரேழாண்டில் புலி யானாயடா — நீ
பகைவருடன் சமர்புரிய நின்றாயடா!
பெற்ற தாயை தெய்வம் என்று சொன்னாயடா - நீ
பிறந்த மண்ணுக்குன் உடலை ஈந்தாயடா!
கோட்டை யடிபாட்டுக்கு போனாயடா - நீ
கோட்டையிலே கொடிபறக்க வைத்தாயடா!
மாவிட்டபுரமோடிச் சென்றாயடா — நீ
மங்காத புகழோடு மாண்டாயடா!
மூவெட்டு வயதுனக்கு முடியாமலே — உன்
முழு உடம்பை ஈழத்துக் கீந்தாயடா!
தாய்நாடு உனையிழந்து தவிக்குதடா
தயங்காது மறுபிறவி எடுப்பாயடா!
குரு சொல்லைத் தட்டாத குமரனடா - உன்
குருதியை ஈழமண்ணுக் கீந்தாயடா!
பெருவாழ்வு வேண்டாமென்று சொன்னாயடா - உன்
பேருடம்பை ஈழமண்ணுக் கீந்தாயடா!
தனிநாடு தமிழீழம் என்றாயடா - உன்
தாயகத்துக் குன்உடம்பை ஈந்தாயடா!
புலி வேங்கையாய் போரினில் நின்றாயடா - பெரும்
புகழோடு வானுலகு சென்றாயடா!

அன்னாரின்
ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்
பெற்றோர், சகோதரர்கள்,
உற்றார், உறவினர்கள்,
நண்பர்கள்.

K. பொன்னுத்துரை
பாரதி வீதி,
அரியாலை.

(R. 930)

## சிந்தனைக்கு

எதிரியின் எதிரியை உனக்கு நண்பனாக்கிக்கொள்.
— மாவோ - சே - துங்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். 20-12-90
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த.பெ.எண் 65

# தியனென்மன் சதுக்கமும் களனி கங்கையும்

சீனப் பிரதமர் லீபெங்குக்கும், அவருடைய 49 பேர் அடங்கிய தூதுக்குழுவினருக்கும் சிறிலங்காவில் அமோக மான வரவேற்பு அளிக்கப்பட்டது.

சிறிலங்கா வந்த சீனப் பிரதமருக்கு அரசாங்க கட்சி, எதிர்க்கட்சி என்ற பாகுபாடு இன்றி அமோக வரவேற்பு அளிக்கப்பட்டது.

சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா அவர்கள் அளித்த வரவேற்பின் போது அரசியல் தன்மையுடன் குடும்ப நட்பும் வெளிப்படுத்தும் அம்சமும் காணப்பட்டது. பிரேமதாசாவின் மனைவியுடன், மகனும் வரவேற்பில் கலந்து கொண்டார். அத்தோடு மிகவும் பிரமாண்டமான முறையில் கொக்ரெயில் பரிமாறலுடன் விருந்தும் அளிக்கப்பட்டது. இந்தவிருந்தில் முன்னாள் ஜனாதிபதியும் கலந்து கொண்டார். அத்தோடு பிரேமதாசா நீண்ட நேரத்தையும் லீ பெங்குடன் செலவழித்தார்.

இதேபோன்றதொரு விருந்துபசாரம் பிரதமமந்திரியான டி. பி. விஜயதுங்கா வீட்டிலும் நடத்தப்பட்டது. பரிசில் களும் பரிமாறப்பட்டன.

முன்னாள் ஜனாதிபதி திரு.ஜே.ஆர். ஜெயவர்த்தனா வீட்டிற்கும் சீனப் பிரதமர் தனது மனைவி சகிதம் விஜயம் செய்தார், அங்கு அவருக்கு தேனீர் விருந்துபசாரம் அளிக்கப்பட்டதோடு பெரும் அன்னியோன்னியமான முறையில் வரவேற்பும் கொடுக்கப்பட்டது.

எதிர்க்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா வையும் லீபெங் அவரது இல்லத்தில் சந்தித்தார் அங்கும் அன்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. அத்தோடு முன்னாள் எதிர்க்கட்சித் தலைவரான அநுரா பண்டார நாயக்காவை பண்டார நாயக்கா ஞாபகார்த்த மண்டபத்தில் சீனப் பிரதமர் சந்தித்தார். அன்னியோன்னியமாக உறவாடினார்.

அத்தோடு சிறிலங்கா அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் இருக்கும் வானொலி, தொலைக்காட்சி என்பனவற்றில் பெரும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. செய்தி அறிக்கை களில் பதினைந்து நிமிடத்திற்கு மேற்பட்ட முக்கியத்துவம் மும்மொழிகளிலும் கொடுக்கப்பட்டதோடு, கட்சி வேறுபாடு இன்றி சீனப்பிரதமரின் சகலருடனான சந்திப்பிற்கும் முக்கியத்துவம் கொடுப்பட்டன.

அதாவது சீனப்பிரதமருக்கு சிறிலங்காவில் மிகப் பிரமாண்டமான வரவேற்பு கட்சி வேறுபாடுகள் இன்றி ஒரு நெருக்கமான மனமார்ந்த வரவேற்பு சகலராலும் அளிக்கப்பட்டது என்றால் அது மிகையாகாது.

அதுமட்டுமல்லாமல், சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா உள்ளிட்டு, அவரது வெளிவிவகார ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் பாதுகாப்பு இணை அமைச்சர் ரஞ்சன் விஜயரெட்ண ஆகியோரால் சீனா சிறிலங்காவிற்குச் செய்துவரும் இராணுவ உதவிக்கு நன்றியும் தெரிவிக் கப்பட்டது.

அண்மைக்காலத்தில் சிறிலங்காவிற்கு விஜயம் செய்த எந்த ஒரு அரசியற் தலைவருக்கும் இவ்வாறானதொரு வரவேற்பும் அளிக்கப்படவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். 1987ஆம் ஆண்டு சகலவிதத்திலும் உதவுவதாகக் கூறிக்கொண்டு சிறிலங்கா வந்த இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கு சிறிலங்கா அரசாங்கம் மனப்பூர்வமானஒருவரவேற்பை வழங்கவில்லை. அத்தோடு அணிவகுப்பு மரியாதையின் போது அவர் கடற்படை வீரரால் தாக்கவும்பட்டார்.

அவரின் பின் சிறிலங்கா வந்த முக்கியமான அரசியற் தலைவர் ஜப்பானியப் பிரதம மந்திரி கையூ ஆவர். அவருக்கும் மகத்தான வரவேற்பளிப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடுகளைச் செய்திருப்பினும் இவ்வளவு பிரமாண்ட மானதாகவும், அன்னியோன்னியமாகவும் அவருக்கு வரவேற்பு வழங்கப்படவில்லை. இத்தனைக்கும் ஜப்பான் சிறிலங்காவிற்கு நிதிவழங்கும் நாடுகளில் பிரதான மானதாகும்.

இந்தநிலையில் சீனப் பிரதமருக்கு அளிக்கப்பட்ட முக்கியத்துவம் சிறிலங்காவின் தேவையையும், அவற்றின் முக்கியத்துவத்தையும் வெளிக்காட்டி நிற்பதோடு, சர்வதேச உறவுகளில், ஓரளவு சிறிலங்கா தனித்துவிடப்பட்டுள்ள தன்மையையும் வெளிக்காட்டுவதாகவுள்ளது.

இலங்கையின் அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படும் மனித உரிமைகள் மீறல்கள் நடவடிக்கைகள் சிறிலங்கா விற்கு மேற்கில் இருந்த உறவுகளைப் பலவீனப்படுத்த கிழக்கில் தனது உறவை வலுப்படுத்த சிறிலங்கா மேற் கொண்ட நடவடிக்கையே சீனாவுடனான இந்த நெருக்க மான உறவாகும்.

அதேவேளை பொருளாதார உதவியைவிட இராணுவ உதவியே தேவை என்பதை வெளிப்படுத்துவதே ஜப்பான் பிரதமருக்கு அளிக்கப்பட்ட வரவேற்பைவிட பிரமாண்ட மான வரவேற்பு சீனப் பிரதமருக்கு அளிக்கப்பட்டமை வெளிப்படுத்தி நிற்கின்றது.

# மாங்குளம் வெற்றி [2]
# உணர்த்தும் செய்திகள்

மாங்குளம் இராணுவ முகாமின் அமைவிடமும், அது சிறிலங்கா இராணுவத்தின ருக்கு எவ்வளவு முக்கியமான தாக இருந்தது என்பதையும், அதனால் தமிழ் மக்கள் அனு பவிக்க நேர்ந்த சிரமங்கள் பற்றியும் எண்ணிப்பார்க்கும் எவரும் மாங்குளம் இராணுவ முகாம் வெற்றி கொள்ளப் பட்ட சாதனையைப் பாராட் டாமல் இருக்க முடியாது.

யாழ்ப்பாணக் குடா நாட்டை வெளி மாவட்டங்க ளுடன் இணைக்கும் பிரதான தரை வழிப்பாதையான கண்டி வீதியில் ஆங்காங்கே இராணுவ முகாம்களை நிறு விச் செயற்பட்டது சிறிலங்கா இராணுவம். ஆனையிறவு, பரந்தன், கிளிநொச்சி, கொக் காவில், மாங்குளம் என்ற வாறாக அடுத்தடுத்து இரா ணுவ முகாம்களை நிறுவுவ தன் மூலம் தமிழ் மக்களை அச்சுறுத்திப் பணிய வைக்க வும், ஆயுதம் தாங்கிய போராட்டப் பாதையை அழித்தொழிக்கவும் கனவு கண்டுவந்தது சிறிலங்கா இராணுவ தலைமைப்பீடம். பரந்தன், கிளிநொச்சி முகாம் களில் தாக்குப் பிடிக்க இய லாமல் இராணுவம் பின்வாங் கிக்கொண்டபோது அது இரா ணுவ தந்திரோபாயம் என்றே அரசு சொல்லிக்கொண்டிருந் தது. கொக்காவிலிலும், கோட்டையிலும் தொடர்ந்த சண்டையில் சிறிலங்கா இரா ணுவம் தோல்வியைச் சந்தித் துக்கொண்ட வேளையில் மாங்குளம் மீதான தாக்குத லும், அதனைக் கைவிட்டு ஓட வேண்டிய நிலை ஏற்பட் டதும் சிறிலங்கா இராணுவ தரப்பில் பெரும் மனச் சோர்வை ஏற்படுத்தியிருக் கின்றது என்பது வெளிப் படை. அண்மையில் வெளி வரும் செய்திகள் இதனை ஊர்ஜிதம் செய்யப் போதுமா னதாகும்.

கண்டிவீதியும், முல்லைத் தீவிலிருந்து ஒட்டுசுட்டான் வழியாக மல்லாவி, பாண்டி யன்குளம், துணுக்காய் போன்ற பகுதிகளை அடை யும் பிரதான தார்ப்பாதை யும் சந்திக்கும் இடத்தில் அமைந்திருந்தது மாங்குளம் சிறிலங்கா இராணுவமுகாம். கண்டிவீதியின் இருமருங்கிலு மாக தபால் நிலையம், பொலிஸ் நிலையம், மருத்துவ சாலை, நெற்சந்தைப்படுத் தும் சபையின் கட்டடங்கள் என்றவாறான பல கட்டடத் தொகுதிகளையும் உள்ள டக்கி சுமார் நூற்றிஐம்பது ஏக்கர் விஸ்தீரணமுள்ள நிலப் பரப்பினை ஆக்கிரமித்துக் கொண்டிருந்தது சிறிலங்கா இராணுவம். கண்டி வீதியை யும், முல்லைத்தீவு - துணுக் காய் வீதிகளையும் பாவிக்கும் பொதுமக்களுக்கு பலத்த சோதனை ஏற்படும் களமாக இவ்விடம் அமைந்திருந்தது. எந்த வீதியில் எந்தப்பக்கம் பயணம் போனாலும் சுமார் ஒரு மைல் தூரத்தை வாக னத்தை விட்டிறங்கி நடந்தே கடக்கவேண்டிய அளவுக்கு பாதுகாப்புப் பலமாக்கப்பட்டி ருந்தது.

இதைவிடக் காடுகள் சூழ்ந்த இப்பகுதியிலிருந்து வெளியே றும் இராணுவத்தினர் காடு களுக்கு ஊடாக பலமைல்கள் வரை ரோந்து சுற்றி முகாம் களைத் தேடவும் முனைந் தனர். முன்னர் வேங்கைகளின் நடமாட்டத்திற்கு முட்டுக் கட்டை போடுவதில் இம் முகாம் முக்கிய பங்காற்றி வந்தது. ஒட்டுசுட்டான் முல் லைத்தீவு இராணுவ முகாம் களோடும், கொக்காவில், கிளிநொச்சி முகாம்களோடும், வவுனியாவோடும் தரைவழித் தொடர்பின் மையமாக இருந் தது மாங்குளம் சிறிலங்கா முகாம்.

ஜூன் 11இல் சண்டை ஆரம் பித்ததன் பின்னர் எந்தச் சிறி லங்கா முகாமும் தரைவழி யில் பிறிதொரு இராணுவ முகாமுடன் தொடர்பைப் பேண இயலாமலிருந்த நிலை யில் மாங்குளம் இராணுவ முகாமிலிருந்த ''கெலிபாட்'' எனப்படும் உலங்கு வானூர்தி இறங்குதளம் சிறிலங்கா இரா ணுவத்திற்குப் பெரும் வாய்ப் பளிப்பதாக இருந்தது. இத னால் வான் மார்க்கமாகத் தமக்குத் தேவையான உதவி களைப் பெற்றுக்கொள்ளக் கூடிய நிலையில் குடிகொண் டிருந்தது இராணுவம்.

சுருக்கமாகச் சொன்னால் தாக்குதலுக்கு உரிய இலக்கு எனத் தேர்ந்தெடுக்க யாது காப்பரீதியில் எந்த வாய்ப்பை யும் கொடுக்காத இந்த இரா ணுவம் தாக்கப்பட்டது பல ரையும் வியக்க வைக்கும் ஒன் றாகும். அதிலும் இம்முகாம் மீதானதாக்குதல் மேற்கொள் ளப்பட்ட காலமும் கவனத் திற்கொள்ளப்பட வேண்டிய தாகும். தமிழீழ விடுதலைப் புலிகளால் 'மாவீரர் வாரம்' என்பது சிறப்பாகக் கடைப் பிடிக்கப்பட்ட காலம். அத னால் எந்தநேரமும் எந்த முகாம்மீதும் தாக்குதல் மேற் கொள்ளப்படலாம் எனச் சிறி லங்கா இராணுவ முகாம்கள் அனைத்தும்விழிப்புடன் இருந் தது ஒருபுறமிருக்க ''மாவீரர் வாரம்'' கடைப்பிடிப்பதனை எப்படியும் முறியடிப்போம் என்று ரஞ்சன் விஜேரத்தினா சூழுரைத்து வந்தார் என்ப தும்; ஜனாதிபதி பிரேமதாசா வும், அவரது பரிவாரங்களும் ஊர்காவற்றுறை, நயினாதீவு பலாலி என விஜயம் மேற் கொண்டிருந்த சந்தர்ப்பம் அது. கோட்டையில் பலியான இராணுவத்தினரின் ஆன்மா சாந்தியடையப் பிரித் ஓதிக் கொண்டிருந்த பிக்குகள் மாங் குளத்தில் மரணமாக்கப்பட்ட இராணுவத்தினரையும் நினை த்துக் கொள்ள வேண்டிய தாயிற்று.

### பாதுகாப்பு அமைச்சில் சர்ச்சை

இதனால் பாதுகாப்பு அமை ச்சின் உயர்பீடத்தில் பெரும் சர்ச்சையே கிளம்பியது. சரி யான உளவுத்துறைத் தகவல் கள் பொருத்தமான உரிய நேரத்தில் தரப்படவில்லை என்று உளவுத்துறைமீது குற் றம்சாட்டியது இராணுவம். தக்க பாதுகாப்பு ஏற்பாடு களுடன் விழிப்பாக இருக்க வில்லை என்று கண்டனத்திற் குள்ளானார் மாங்குளம் பொறுப்பதிகாரி தவுலகல, இராணுவநடவடிக்கைகளுக்கு விசேட பயிற்சியளிக்கப்பட்டு சண்டையில் தேர்ச்சி மிக்கது எனச் சிறிலங்கா இராணுவத் தில் பெயர் வாங்கிய கஜபாகு படைப்பிரிவு சிதறிஓடியதால் சிண்டைப் பிய்த்துக் கொண் டிருக்கிறது இராணுவத் தலை மைப்பீடம். விமானப்படை யின் விமானங்கள் இராணு வத்தின் தேவைக்கு முக்கியம் அளிக்காமல் பிற தேவைகளுக் குப் பயன்படுத்தப்படுவதால் விமானப் படையின் உதவி இராணுவத்திற்குப் போது மான அளவில் கிடைக்க வில்லை என குறைபட்டுக் கொண்டார் உளவுத்துறைத் தலைவர். ஜனாதிபதியையும் அவரின் பரிவாரங்களையும், 'பிரித் ஓதும்' பிக்குகளையும் விமானப்படை காவித் திரிந்த தாலேயே மாங்குளம்தோல்வி ஏற்பட்டதாக அரசின் மீது குற்றம் சாட்டும் எதிர்க்கட்சி களுக்கு ஒரு துரும்பைக்கொடு த்தார் உளவுத்துறைத் தலை வர்.

### மாபெரும் வெற்றி

இவை அனைத்தையும் கவ னத்தில் கொண்டு பார்க்கும் எவரும் மாங்குளம் தாக்குத லின் வெற்றி ஒரு மாபெரும் வெற்றி என்பதனை மறு க்கவே முடியாது. இந்த வெற்றியானது எதிரித்தரப்பு இராணுவத்தின் பலவீனத் தாலோ அல்லது ஆளணி மற்றும் உதவி வழங்கல் போதாமையினாலோ கிடை த்துவிடவில்லை. எத்த னையோ வீரர்களின் அர்ப் பணிப்புமிக்க உழைப்பும், சிந் தப்பட்ட வியர்வையும், கொட் டப்பட்ட செங்குருதியும் பெற் றுத் தந்திருக்கும் இந்த வெற் றியை தமிழ் மக்கள் ஒவ்வொ ருவரும் உளப்பூர்வமாக உணர்ந்துகொள்வார்களேயா னால், இத்தகைய வெற்றி களைத் தொடர்ந்து பெற வும், ஈட்டிய சாதனை களைப் பாதுகாக்கவும் திடங் கொள்ளுவர் என்றால் மிகை யானதல்ல.

தமிழ் மக்களுக்கென தனி நாடு என்றும், அதற்காக ஆயு தம் தாங்கினோம் என்றும் கூறிக் கொண்ட சக்திகள் கதி கெட்டு-திசைமாறி-இன்று எதி ரியின் காலடியிலேயே வீழ்ந்து கிடந்து தங்கள் சுயநலத்தை அப்பட்டமாக வெளிக்காட்டி நிற்கும் வேளையிது. ஆனால் தமிழ்மக்களின் இறைமையைக் காக்கவும் - சுயநிர்ணய உரி மையின் அடிப்படையிலான தனி அரசை நிறுவவும் - தன் மானத்தை நிலைநாட்டவும் போராடும் தமிழீழவிடுதலைப் புலிகளுக்கும். அதன் தலை மைத்துவத்திற்கும் கட்டுப் பட்டு ஓரணியாக தமிழ்மக் கள் அனைவரும் ஒருமுகப் படல்வேண்டும். அதன் ஊடாக தமிழீழப் போராட் டம் துரித வளர்ச்சிபெறவேண் டும். அப்போதுதான் மாங் குளத்தையொத்த பல வெற் றிகள் பெற்று எதிர்காலம் சிறப்பாகும் எனத் துணிந்து கூறலாம்.

### ஏனிவர் இப்படி ஆகிப்போனார்?

காவிகள் ஆயிரம் நம் இனத்தில்
காலங்கள் பாடங்கள் சொல்லியும் சுயநலத்தில்
தாலிகள் ஏராளம் இவர் கரத்தில்
துன்பங்கள் தாராளம் இவர் கரத்தால்

பெயர்கள் பலப்பல வைத்துக்கொண்டார்.
பெயர்கட்கும் இவர்கட்கும் தொடர்பே இல்லை
பெயருக்கு அமைப்புக்கள் கட்டிக் கொள்வார்
பாய்ந்தோடி எதிரிகளுக்கேவல் செய்வார்

தம்மினம் அழித்திட தயக்கம் காட்டார்
தாமாக முன் வந்து காட்டிக் கொடுப்பார்
எம்மின விடுதலை பேசிக் கொள்வார்
ஏனிவர் இப்படி ஆகிப்போனார்?

– பைப்

# மாவீரர் தியாகங்கள் தமிழர் கலாசாரத்தைப் பாதுகாத்தது

– ஆஞ்சநேயர்

(தெல்லிப்பழை)

மாவீரர்கள் செய்த உயிர்த் தியாகங்களினால்தான் இன்று தமிழ்மக்கள் தனித்துவமான இனமாக நிலைபெறுவதுடன் தமிழர்களின் கலை, கலாசாரமும் பேணிப்பாதுகாக்கப் படுகிறது.

இவ்வாறு நேற்று முன்தினம் தெல்லிப்பழை பிரதேச மாவீரர் கலையரங்கில் வட்ட அவைத்தலைவர் திரு. மனோகரன் தலைமையில் நடைபெற்ற லெப். கேணல் மதியின் இரண்டாவது நினைவஞ்சலிக் கூட்டத்தில் கலந்து கொண்டுஉரையாற்றிய யாழ். மாவட்ட பிரச்சாரப் பொறுப்பாளர் திரு.ஆஞ்சநேயர் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் தென் தமிழீழ மக்கள் படும அவலநிலையை உணர்ந்து அவர்களின் துயரங்களைப் போக்க அனைத்துத் தமிழீழ மக்களும் தங்களாலியன்ற பங்களிப்பை வழங்க வேண்டும் என்றார்.

லெப். கேணல் மதியின் சகோதரி திருமதி சிவராசா குத்துவிளக்கேற்றி மதியின் உருவப்படத்திற்கு மலர் மாலை சூட்டினார்.

இக்கூட்டத்தில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிப் பிரமுகர் திரு. தேவர், மகளிர் முன்னணிப்பொறுப்பாளர் செல்வி வினுஜியா உட்பட பலர் உரையாற்றினர். உடுவில் மூறைசாரக்கல்வி நிலையம், முதலுதவிச் சிகிச்சை நிலையம், கலை, கலாசாரப் பிரிவு ஆகியவற்றின் கலை நிகழ்ச்சிகளும், மாவீரர் மதி சம்பந்தமான கவிதா நிகழ்வுகளும் இடம் பெற்றன. (மு)

## கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட 10 பெண்கள் கைது

(தாவடி)

தாவடி தெற்கில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டிருந்த பத்துப் பெண்களை விடுதலைப் புலிகள் கைது செய்துள்ளனர்.

நேற்று முன்தினம் தாவடி தெற்கு புளியடி என்னுமிடத்தில் திடீர் தேடுதல் வேட்டையில் ஈடுபட்ட விடுதலைப் புலிகள், கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டிருந்த பத்துப் பெண்களைக் கைது செய்ததுடன் ஆறிற்கும் மேற்பட்ட கசிப்பு பரல்களையும், கசிப்பு உற்பத்திச்சாதனங்களையும்கைப் பற்றியுள்ளனர். (மு)

## குழு முரல் தாக்கி மீனவர் காயம்

(யாழ்ப்பாணம்)

குருநகர் கடலில் மீன்பிடிக்கச் சென்றவரை குழுமுரல் பதம்பார்த்தது.

நேற்று அதிகாலை குருநகர் கடற்பரப்பில் படகில் நின்று வலைஇழுத்துக்கொண்டிருந்த அகஸ்ரின் ஜேசுதாசன் என்ற (40வயது) நருக்கு நீருக்குள் இருந்து திடீரென செங்குத்தாக மேலெழுந்த குழுமுரல் மீன் நெற்றியில் பொட்டு வைத்தது போல குத்தியதில் நெற்றியில் ஒரு ஓட்டை ஏற்பட்டதுடன் படகிலேயே மயங்கி விழுந்தார். அதிகாலையிலேயே குருநகர் ஹோலி குறோஸ் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். இருந்தும் அவருடைய உடல்நிலை மோசமடையவே மயக்கமுற்ற நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டார். (லோ)

## சுழற்சி முறையில் வீடியோப்படம்

தென் தமிழீழ மக்களின் இன்றைய நிலை பற்றிய வீடியோப் படம் மானிப்பாய் பிரதேசத்திற்கு உட்பட்ட சகல சன சமூக நிலையத்திலும் 14 ஆம் திகதி முதல் தினசரி சுழற்சி முறையில் மானிப்பாய் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியினரால் காண்பிக்கப் பட்டு வருகின்றது.

## ஹெலிதாக்கி ஒருவர் பலி

(கொடிகாமம்)

கொடிகாமம் பகுதியில் ஹெலிகொப்ரர் ஒன்று நேற்று காலை 7 மணியளவில வட்டமிட்டுத் தாக்கியதில் ஒருவர் பலியானார்.

வீதியில் சென்றுகொண்டிருந்த இவர் ஹெலிகொப்ரரை கண்டு பாதுகாப்புத் தேடி ஓடிக் கொண்டிருந்த போது வேட்டு ஒன்று வயிற்றில் பாய்ந்து ஸ்தலத்திலேயே பலியானார். (லோ)

## மிதிவெடியில் சிக்கியவர் இரத்தப் பெருக்கால் மரணம்

(நல்லூர்)

மாங்குளம்இராணுவமுகாம் இடிபாடுகள் பக்கமாகச் சென்ற செல்வரெத்தினம் (வயது 30) மிதிவெடியில் அகப்பட்டுக் கால் ஒன்று துண்டிக்கப்பட்ட நிலையில் நேற்று சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு எடுத்து வரப்பட்டார் வைத்தியசாலையில் அவசரசிகிச்சை வழங்கப்பட்டும் அவரின் உயிரைக் காப்பாற்ற முடியவில்லை. இரத்தப்பெருக்கால் அவருக்கு மரணம் சம்பவித்தது. (85)

### பெண் போராளிகள்

மரணமடைந்துள்ளனர். இவர்களுக்கு விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றனர். (மு)

### தாந்தாமலை

சிக்கொடி) நடராஜா, திருச்செல்வம் (18 கச்சிக்கொடி) முத்தையா உதயகுமார் (20, 38ஆம் கொலனி), சின்னையா அரியநாயகம் (18 பட்டிப்பாளையம்) ஆகிய ஐவருமே இவ்வாறு சுட்டுக் கொல்லப் பட்டவர்களாவர். (மு)

### ஆசிரியர்

இடைநிறுத்தும்படி பணிப்பாளருக்கு வானொலி தொலைத் தொடர்புசாதனமூலம் செய்தி அனுப்பிவைக்கப்பட்டது. இந்த செய்தியைப் பெற்றுக் கொண்ட வடமாகாண கல்விப் பணிப்பாளர் இரா.சுந்தரலிங்கம் இந்த விடயம் தொடர் தொண்டர் ஆசிரியர்கள் எவரும் இந்த அறிவித்தல் குறித்து மனம உடைந்த நிலைக்கு சென்றுவிடக்கூடாது எனவும் அடுத்தவருடம் பெப்பிரவரி மாதமளவில் மீண்டும் நேர்முகப் பரீட்சை நடாத்துவது குறித்து செய்திகிடைக்கும் என தாம் எதிர்பார்ப்பதாகவும்தெரிவித்தார். அதுவரை அனைத்து தொண்டராசிரியரும் கடந்த காலத்தைப் போலவே தமது பணியைத் தொடரவேண்டும் என்றும் கூறினார்.

இதேவேளைநேற்று அழைக்கப்பட்டிருந்த யாழ். மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளையும் சேர்ந்த தொண்டர் ஆசிரியர்களுக்கான நேர்முகப்பரீட்சைகள் மாலைவரை தொடர்ந்து நடைபெற்று முடிந்தது (லோ)

### கப்பல்களை

வானொலிதொலைத்தொடர்புச்சாதனம் ஊடாக அத்தியாவசியசேவைகள் நாயகத்துடன் தாம் தொடர்பு கொண்டதாக யாழ். அரச அதிபர் நேற்று மதியமளவில் தெரிவித்தார் (லோ)

### பாகிஸ்தான்

இதே வேளை கூடிய விரைவில இலங்கையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணமுடியும் எனப் பாகிஸ்தான் பிரதமர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

### திருமலையில்

முதன்மையான இராணுவஅதிகாரியான இவர் வேறு இரண்டு வாகனங்களின் பாதுகாப்புடன் வந்தசமயத்தில் இவரது வாகனம் கண்ணிவெடித் தாக்குதலுக்குள்ளானது என்று ஏஜென்சிச் செய்திகள் கூறின. இவர் முன்னர் யாழ்ப்பாணத்தில் கடமையாற்றியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவருடன் உடன் சென்ற திருமலை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரும் மேலும் இரு அதிகாரிகள் உட்பட மூன்று இராணுவத்தினரும் கொல்லப்பட்டது தெரிந்ததே.

### கட்டுவன்

தாக்குதலால் ஏற்பட்டசேதத்துடன் முகாம் திரும்பினர். இராணுவத்தினருக்கு ஏற்பட்ட சேதவிபரம் தெரியவரவில்லை.

கட்டுவன், குரும்பசிட்டிப் பகுதியில் கடும நேரடிமோதல் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் பலாலி, காங்கேசன்துறை முகாம்களில்இருந்து பலமான ஷெல் தாக்குதல் இந்தமுகாம்களைச் சூழவுள்ள பகுதிகளில் மேற்கொள்ளப் பட்டது.

இந்த மோதலில் கப்டன் சுந்தரி உட்பட எட்டுப்பெண் போராளிகள் வீரமரணமடைந்தனர். (ச) (மு)




## ஈழப் போராளிகள் கைது ஒரு கண்துடைப்பு

-வாழப்பாடி

தமிழ்நாட்டில் இலங்கைப் போராளிகளைக் கைதுசெய்ய மாநில அரசு எடுத்துவரும் நடவடிக்கைகள் ஒரு கண் துடைப்பே என்று மாநில காங்கிரஸ் கட்சித் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி குற்றம் சாட்டியுள்ளார். நேற்று சென்னையில் செய்தியாளரிடம் பேசிய அவர் விடுதலைப் புலிகள் தப்பிச் செல்வதற்கு ஏதுவாக அவர்களுக்கு முன்னரே தகவல்கள் தெரிவிக்கப்பட்டுவிடுகிறது என்றும், எல்லைப் பாதுகாப்புப் படையினரின் உதவியைக் கருணாநிதி கோரியிருப்பதிலிருந்து தமிழகத்தில் சட்டம், ஒழுங்கு சீர்குலைவை ஏற்றுக் கொண்டுள்ளார் எனவும் மேலும் கூறினார்.

தஞ்சாவூரில் 50 போராளிகளும் 4 லாரி ஆயுதங்களும் தப்பிக்க வகை செய்யப்பட்டதாக சுட்டிக்காட்டினார். சோதனைச் சாவடிகளில் இவை தடுக்கப்பட்டபோதும் தமிழக அரசின் சலுகையால் தப்பிச் சென்றதாக கூறினார். போராளிகளை கைதுசெய்யும் சாட்டில் உண்மையான போராளிகளைத் தப்பவிட்டுவிட்டு மாணவர்களையும், உடல் ஊனமுற்றவர்களையும் கைது செய்து கொடுமைப்படுத்துவதாக தெரிவித்தார்.

## தமிழ்நாட்டு அகதிமுகாம்களில் இளைஞர் பொலிஸாரால் கைது

மதுரையில் பெரியார் நகர், உச்சப்பட்டி, கூடல்நகர் ஆகிய இடங்களிலுள்ள அகதி முகாம்களில் நேற்று 18 தமிழ்ப் போராளிகள் கைதுசெய்யப் பட்டனர் என்றும், புதுக் கோட்டையில் நேற்றுமுன்தினம் 18பேர் கைது செய்யப் பட்டனர் என்றும் தமிழகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இப் பொலிஸ் நடவடிக்கையே இருதினங்களுக்கு முன்னர் தமிழக முதல்வர் கருணாநிதி குறிப்பிட்டஇரண்டாம் கட்ட நடவடிக்கை என்பது குறிப்பிடத்தக்கது.

## விவசாய திணைக்கள ஒதுக்கீடு செலவிட முடியாத நிலை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட விவசாயத் திணைக்களத்திற்கு விவசாய நடவடிக்கைகளுக்காக அரசினால் வழங்கப்பட்ட இவ்வாண்டுக்குரிய பணம் வருடம் முடிவடையும் சமயத்தில் வந்து சேர்ந்துள்ளமையால் இப்பணத்தை பயன்படுத்த முடியாத நிலையில் விவசாயத் திணைக்களம் உள்ளது. ஏனெனில் எந்த விவசாய முயற்சிகளும் நீண்ட காலத்திற்கு முன்னரே திட்டமிட்டு மேற்கொள்ளவேண்டும் என்று மேற்படி அலுவலக அதிகாரிகள் தெரிவித்தனர். (க)

### வவுனியாவிற்கு

ஏற்றிச் செல்வதற்கு கூட்டுப் படை தலைமையகத்தின் அனுமதி பெறவேண்டும் என்றும் கூட்டுறவுச் சங்கங்களைகளுக்கு பொருட்கள் விநியோகம் செய்யும் லொறிகள் கூட மேற்படி அனுமதி பெற்றே செல்ல வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சில தினங்களுக்கு முன்னர் வவுனியா நகரப் பகுதியிலிருந்து பொருட்கள் ஏற்றி வந்த சில லொறிகள் கூட்டுப் படை தலைமையகத்தின் அனுமதி பெறாத காரணத்தினால் வவுனியாவில் உள்ள இராணுவத்தினரால் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டன. (தி)

## நீர் இறைக்கும் இயந்திரம் திருட்டு

அச்சுவேலி வளலாய்ப் பகுதியில் கடந்த திங்கட்கிழமை எம். கணபதிப்பிள்ளை என்பவரின் வீட்டில் ஐயாயிரம் ரூபா பெறுமதியான நீர் இறைக்கும் இயந்திரம் திருட்டுப் போயுள்ளது.

இத்திருட்டு சம்பந்தமாக அச்சுவேலி விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியினர் ஒருவரைக் கைது செய்துள்ளனர்.

## மீண்டும் மணிக்குரல்

(யாழ்ப்பாணம்)

மீண்டும் யாழ்நகரில் நேற்றுப் பகல் மணிக்குரல் புரட்சிப்பாடல்களுடன் ஒலிபரப்பப்பட்டது.

நகரின் பல்வேறு பகுதிகளிலும் ஒலிபெருக்கிகள் பொருத்தப்பட்டுக் கொண்டிருந்ததை நேற்று மாலை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31ம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 20ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# தமிழீழ மக்களுக்கு ஒரு தகவல்

## பள்ளிக்குச் செல்லும் பிள்ளைகளே!

உங்களுக்குத் தேவையான அப்பியாசக்கொப்பிகள், புத்தகங்கள்,
சகல பாடசாலை உபகரணங்கள் யாவும் கிடைக்கவில்லையே என்ற கவலையா?
என்ன வேண்டும்? எத்தனை வேண்டும்? அத்தனைக்கும் எங்களிடம் வாருங்கள்
எங்கே என்று கேட்கிறீர்களா?

# த மி ழ ரு வி

**பல்பொருள் அங்காடி; ஒலிப்பதிவுக் கூடம்**
**71, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

## விடுதலைப் பாடல் விரும்பிகளே!

தமிழீழத் தாயக விடுதலைப் பாடல்களின் ஒலிப்பதிவு நாடாக்கள்
அனைத்தும் எங்களிடம்தான் விற்பனையாகின்றன.

- ★ தமிழீழப் பாடல்கள்
- ★ புயல்கால ராகங்கள்
- ★ களத்தில் கேட்கும் கானங்கள்
- ★ பாசறைப் பாடல்கள்
- ★ களத்தில் மலர்ந்தவை
- ★ அன்னியர் வந்து புகல் என்ன நீதி
- ★ இந்த மண் எங்களின் சொந்த மண்
- ★ வேங்கைகளின் விடுதலை வேதங்கள்
- ★ தமிழீழ தேசியத் தலைவர், திரு. வே. பிரபாகரன் அவர்கள் தமிழீழ மக்களுக்கு ஆற்றிய உரை.

என்ன வேண்டும்? எத்தனை வேண்டும்?
அத்தனைக்கும் எங்களிடம் வாருங்கள்.
எங்கே என்று கேட்கிறீர்களா?

# த மி ழ ரு வி

**பல்பொருள் அங்காடி; ஒலிப்பதிவுக் கூடம்**
**71, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

இன்னும் அழகு சாதனங்கள், உங்கள் அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி
செய்யும் சகல பொருட்களும் வேறு எங்கிலும்விட இங்கு மலிவாகப்
பெற்றுக்கொண்டோம் என்று நிறைவடைவீர்கள்.

வாருங்கள். . . . . அன்புடன்,

# த மி ழ ரு வி

**பல்பொருள் அங்காடி; ஒலிப்பதிவுக் கூடம்,**
**71, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்.**